★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

உண்ணுவிரதம் மேற்கொண்ட உதவி கலெக்டர்!

ஒரு கிராமத்தில் உள்ள மக்களை, அக்கிராமத்திற்குக் குடி நீர் வசதி செய்து தருவதற்காக ரூ. 2,000 வரை திரட்டித் தருமாறு தூண்டுவதற்காக சௌராஷ்டிரா உதவி கலெக்டர் உண்ணுவிரதம் துவங்கிஞராம்!

இந்தத் தண்ணீர் வசதி செய்துதர கிராம மக்கள் ரூ. 2,000 தந்தால் மேலும் ஆகக்கூடிய செலவுகளுக்குப் பணம் கஜானுவி

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: சித்திரை 19உ செவ்வாய் (1—5—56) ★ ★ வெளியூர்: சித்திரை 20உ புதன் (2—5—56) [இதழ் 273

'தமிழ் நாடு' என்று பெயரிடாததற்கு காமராசர் சதித் திட்டமே காரணம்?

இல்லையென்ருல் மறுத்துரைக்கட்டும்

பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்தின் நிலை என்ன?

சென்னைப் பொதுக்கூட்டத்தில் அண்ணு கருத்துரை

சென்னை 16-வது வட்ட தி. மு. கழக முதலாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் 29—4—56ல் நடைபெற்றபோது, விழாவில் கலந்துகொண்டு அண்ணு அவர்கள் ஆற்றிய கருத்துரையின் முதற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. இறுதி பகுதி இங்கு தரப்படுகிறது :—

"'தமிழ் நாடு' என்று பெயர் வைத்தால் உலகத்தவருக்குப் புரியாது என்கிருர் காமராசர்.

"இப்படிக் கூறுபவர் காமராசர்; உலகத்திற்குப் புரியாது என்று, உலகத்தவருடனேயே அதிகத் தொடர்பு வைத்திருக்கும் ஒரு டாக்டர் இலட்சுமணசாமி, ஒரு சர் ஸ. இராமசாமி கூறிஞல் அதுபொருத்தமானதாக இருக்கமுடியும்; ஆனல் காமராசர்—ஏதோ, பாரீசில் நேற்றும், நியூயார்க்கில் அதற்கு முன் தினமும் என்று உலகத்தைச் சுற்றி வந்து கொண்டிருப்பவர் போலவும், அங்கிருப்பவர்களைப் பார்த்து, 'உங்களுக்குத் தமிழ் நாடு தெரியுமா?' என்று கேட்டு அவர்கள், 'தெரியாதே' என்று சொன்னது போலவும், 'தமிழ் நாடு என்ருல் உலகத்தவருக்குப் புரியாது' என்று கூறுகிருர், காமராசர். இவருக்கும் — எனக்கும், தமிழ் நாட்டைத் தவிர வேறு நாடே தெரியாதே! அப்படியிருக்க. 'உலகத்திற்குப் புரியாது' என்பது என்ன நியாயம்? உலகத்தவருக்குப் புரியாது என்ருல், ஏன் அவர்களுக்குப் புரிய வேண்டும்?

"தமிழர் என்பதைவிட 'மதருசி' என்ற பெயர் எந்த வகையில் உயர்ந்தது?

"வடக்கே; 'மதருசி' என்ற பெயரை, நம்மைக் கேவலப்படுத்துவதற்குத்தான் உபயோகிக்கிருர்களே தவிர, நம்மைப் பெருமைப் படுத்துவதற்கு அல்லவே!

"கோபமாகப் பேசுகிற காமராசராஞலும், அமைதியாக உலவுகிற வேறு எவராஞலும், வடநாட்டில், 'அதோ போகிருன் பார்த்தாயா, மதருசி' என்று கேலி பேசத்தானே செய்கிருர்கள்? இப்படி இருக்க, ஏன் காமராசர் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க மறுத்தார்?

"காமராசர் இங்கேதான், ஒரு சதித்திட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக நான் யூகிக்கிறேன்.

"தட்சிணப் பிரதேசம் என்ற திட்டத்திற்கு காமராசர் பண்டித நேருவிடம் ஒப்புதல் அளித்துவிட்டார்.

"இங்கே வந்து, 'தட்சிண பிரதேசம் என்ற திட்டத்தைப்பற்றி நாங்கள் பேசினேம்; ஆனல், இறுதி முடிவு எதும் மேற்கொள்ளவில்லை; மக்களைக் கேட்காமல் எதும் கூறுவதற்கில்லை' என்று அவர் பேசுகிருர். அதேபோது, மந்திரி சுப்பிரமணியமும், சேதுபதியும், தட்சிணப் பிரதேசத் திட்டத்திற்கு ஆதரவு திரட்டும் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

"மந்திரிகள் சுப்பிரமணியம், சேதுபதி ஆகியோரின் வீரத்தை நான் மதிக்கிறேன்,

"தட்சிணப் பிரதேசத் திட்டத்திற்கு இத்தனை எதிர்ப்பு நாட்டில் இருக்கிறது என்பது தெரிந்தும் திட்டத்தை ஆதரித்துத் தீவிரமாகப் பேசி வருகின்றனர். ஏன் காமராசருக்கு இந்தத் தைரியம் இல்லை?

"தட்சிணப் பிரதேசத் திட்டத்திற்கு இவர் நேருவிடம் ஒப்புதல் தரவில்லை என்ருல், காமராசர் அறிக்கை தரட்டுமே! 'நான் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஆதரிக்கவில்லை; பண்டித நேருவிடம் ஒப்புதல் தரவில்லை; தட்சிணப் பிரதேசத் திட்டம், இப்போதோ தேர்தலுக்குப் பிறகோ அமுல் செய்யப்படமாட்டாது' என்று வெளிப்படையாக அறிக்கை தருவாரா, காமராசர்?

"இதுவரை அவர் அப்படி அறிக்கை தராததிஞல்தான் நான், இவர் நேருவிடம் ஒப்புதல் தந்திருப்பதாக யூகிக்கிறேன் என்று கூறுகிறேன்,

"நான் திட்டத்தை எதிர்க்காமலும், ஆதரிக்காமலும் இருந்து கொண்டு, திட்டத்தை எதிர்ப்பவர்களின் வாயை மூட முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்; நீங்கள் எல்லாம், தட்சிணப்பிரதேசத் திட்டத்திற்கு சொந்தக் கருத்து என்ற பெயரில் ஆதரவைத் திரட்டிக் கொண்டிருங்கள்; பொதுத் தேர்தல் முடிந்தபிறகு, திட்டத்தை அமுல் செய்யுங்கள்; நான் பிகாருக்கோ, ஒரிசாவிற்கோ

(4-ம் பக்கம் பார்க்க)

அந்தப் பாட்டை அவரும் பாடுகிருர்!

கோவை, ஏப். 27—

"விருதுகள் வழங்குவதில் தென்ஞடு—வடநாடு என்ற பாகுபாடு இருக்கக் கூடாது. இந்தத் தடவை, தென்னுட்டில்,இருவருக்குத்தான் விருது கிடைத்திருக்கிறது; ஆனல் வடநாட்டில் ஐந்தாறு பேருக்குமேல் விருது கிடைத்துள்ளது. இனிமேல், சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுப்பதில், வடநாடு — தென்ஞடு வேறுபாடு கருதக் கூடாது."

இவ்வாறு, சமீபத்தில், சங்கீதக் கர்நாடக அகடெமியினரால் சிறந்த கலைஞர் என்று தேர்ந்தெடுக்கப் பட்டு, குடியரசுத் தலைவரிடமிருந்து விருதுபெற்ற பாலக்காடு மணி அய்யருக்கு நடைபெற்ற பாராட்டு உபசாரத்திற்கு தலைமை தாங்கிப் பேசுகையில், அரியக்குடி இராமானுச அய்யங்கார் குறிப்பிட்டுள்ளார்.

'செல்வத்தில்புரண்டுகிடப்பவர்களால் ஏழ்மையை ஒழிக்க இயலாது'

'நாட்டின் செல்வப் பெருக்கம் ஏழை எளியவர்களைப் பொறுத்ததாகும்'

'தொழிலின் மதிப்பை உணர்ந்த மக்களை ஒதுக்கித் தள்ளுவது கேலிக்குரியதாகும்'

தாழ்வு மனப்பான்மையைக் கைவிடுமாறு மத்திய அமைச்சர் அறிவுரை

பாராபுங்கி, ஏப். 27—

"நீண்ட காலமாக நாட்டில் நிலவி வரும் ஏழ்மையை, ஏழைகளால்தான் போக்க முடியும்; செல்வத்தில் புரள்பவர்களால் இயலாது,"

என்று, மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி ஜெகஜீவன்ராம் இங்கு நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாடு ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"நாட்டின் செல்வப் பெருக்கம் நிலத்திலும், தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும், வேலை செய்கிற ஏழை எளிய மக்களைப் பொறுத்ததுதான். தொழிலின் மதிப்பை உணர்ந்த மக்கள், சமுதாயத்தில் வெறுத்து ஒதுக்கப்படுவதும், கடைசி இடமளிக்கப்படுவதும் கேலிக்குரியதாகும்.

"சமுதாயத்தில், ஒரு நல்ல அந்தஸ்து இல்லாமையும், பொருளாதார அடிமைத்தனமும், இந்த மக்களிடையே ஒருவகை அச்சத்தை மூட்டி, அவர்களின் வளர்ச்சியைத் தடுக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களையும், பின்தங்கியவர்களையும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை எல்லாம், இந்த அச்சத்தைப் போக்குவது எப்படி என்பதுதான்.

"தங்களைப் பிடித்துள்ள பயத்தை விடுத்து, தங்கள்பலத்தை உணர்ந்து கொள்வார்களேயாஞல், உண்மையான செல்வப் பெருக்காளர்களான ஏழை மக்களால் இந்தியாவை நினைத்த மாத்திரத்தில், வளமாக்கிவிட முடியும்.

"ஜமீன்முறை ஒழிக்கப்பட்டுவிட்டாலும், நிலப்பிரச்சினை இன்னும் கடுமையாகவே இருக்கிறது. பிறரால் நிலத்தைப் பயிரிடுபவர்களிடமல்ல—மாருக, நிலத்தை நேரடியாகத் தாமே உழுது பயிரிடுபவரிடம்தான் நிலம் இருக்க வேண்டும்.

"தீண்டாமை வேகமாக மறைந்து வருகிறது; ஆனல், சாதிப்பித்து இன்னும் தன்பிடியைத் தளர்த்திக் கொள்ளவில்லை. இந்த சாதிவெறி, இந்துக்களை மட்டுமின்றி இந்துக்களல்லாதோரையும் பிடித்திருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களும், பின்தங்கிய வகுப்பாரும் தங்களின் தாழ்வு மனப்பான்மையைக் கைவிட்டுவிட வேண்டும்"

மறைவு

நீண்டகாலமாகவே சுயமரியாதை இயக்க ஆதரவாளராக இருந்தவரும், ஆத்தூர் வட்டாரத்தில் தி. மு. கழக வளர்ச்சிக்கு பெருந்துணை புரிந்தவரும், சேலம்மாவட்ட பெத்தநாயக்கன் பாளையம் தி. மு. கழகக் கிளை பொருளாளருமான தோழர் பெ. ப. மாணிக்கம் அவர்கள், தமது 30-வது வயதில், 23—4—56ல், இருதய நோயால் பாதிக்கப்பட்டு இயற்கையெய்திஞர் என அறிந்து மிக வருந்துகிருேம். அன்னரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம். (ஆ-ர்.)

'சுமை தாங்கி'

மாநில மாநாட்டில் 20-5-56 அன்று புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிப்பதற்காக 'சுமை தாங்கி' என்னும் புத்தம் புதிய நாடகத்தைத் தோழர் பாண்டுரங்கன் எம். ஏ., அவர்கள் தீட்டியுள்ளார். ஒத்திகைப் பணி மிக மும்முரமாக நடை பெற்றுக் கொண்டு வருகிறது.

—விளம்பரக் குழு

சிறிய காரியத்திற்காகப் போராட்டமாம்!

நம்மைக் குறித்து காமராசர்

"...இந்த நாட்டில், எதிர்க் கட்சிகள், சர்க்காரை சதா தாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன; தி. மு. க. போன்ற கழகங்கள், 'ஒரு இடத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்ற சிறிய காரியத்திற்காக'ப் போராட்டங்கள் நடத்தி, அதைப் பெரிதாக்குகின்றன. மற்றும் தேவிகுளம்-பீர்மேடு பிரதேசம் தமிழகத்துடன் சேரவேண்டும் என்று கிளர்ச்சி செய்கின்றனர்; தேவிகுளம் — பீர்மேட்டைக் கேட்டால், நாம் கூடலூரை இழக்க நேரிடும்,"

என்று, முதலமைச்சர் காமராசர், லெப்பைக் குடிக்காடு புவர் காங்கிரஸ் ஆண்டு விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறியுள்ளார்.

—'சு. மி.'; 30-4-56

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 1—5—'56 செவ்வாய்

வாழ்க மே விழா!

'தொழிலாளர்கள், ஒரு மாபெரும் சக்தி' என்பதை உலகிற்குத் தெளிவாக உணர்த்திய வரலாற்றுப் பெருமை பெற்ற நிகழ்ச்சியின் நினைவு நாள்தான் மே தினம்!

காண்பதெல்லாம் செய்து தரும் உழைப்பாளர் பெருமக்கள் உரிமை முழக்கும் நாளாக, ஒப்பற்ற மகிழ்ச்சித் திருநாளாக உலகெங்கும் கொண்டாடும் பெருநாள் மே தினம்!

முதிர்ந்த முதலாளித்துவ நாடாகத் திகழும் அமெரிக்க நாட்டுத் தொழிலாளர்கள்தான், இந்த எழுச்சி தரும் பொன்னாளின் சிருஷ்டி கர்த்தாக்கள்.

'உள்ளது 24 மணி நேரம்; அதில் உழைப்பே 12 மணி நேரமிருந்தால், ஒய்வேது, ஒழிவேது? ஓடாகத் தேயும் உடலுக்கு—உழைத்த அலுப்பும், களைப்பும் நீங்க போதுமான ஓய்வு வேண்டாமா? எனவே, எட்டு மணி நேரம் மட்டுமே உழைப்போம்,' என உரிமை முழக்கமிட்டனர், மே தினத்தைத் தோற்றுவித்த சிகாகோ நகரத் தொழிலாளர்கள்.

இந்த உரிமையைப் பெற அந்தத் தொழிலாளர் தந்த விலை மதிப்பில்லாத் தியாகம், அந்த உரிமையை இன்று அனுபவிக்கும் அத்தனை பேருக்கும் எழுச்சியும், விழிப்பும் தருவது இயற்கையே! அதன் விளைவுதான், உலகில், உழைத்து வாழ்பவர்கள் எவரெவரோ, அவரெல்லாம், மே தினத்தை எழுச்சி நாளாக—உரிமை முழக்கும் நாளாக—விடுதலைக் கோரும் நாளாக மே தினத்தை விழாவாகக் கொண்டாடுவது.

மேதின விழா, திராவிடத் திருநாட்டில் பெருவிழாவாகக் கொண்டாடப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். மே தினம் போன்ற விழாக்கள்தான், இந்த நாட்டுத் தொழிலாளர்களுக்கு 'விழிப்போம்; விறு கொண்டு எழுவோம்' என்ற எழுச்சியைத் தோற்றுவிக்க முடியும்.

இந்த நாட்டில் கொண்டாடப்படும் ஏராளமான விழாக்கள், தொழிலாளர் தம் வாழ்வைப் பலியிடவும், உழைப்பைச் சுரண்டவும், செல்வத்தைச் சூறையாடவும் மட்டுமே அடிகோலுவனவாகும்.

தொழிலாளர்களை முழு அடிமைகளாக்கி, அவர்தம் ஆற்றலை அவர்கள் உணரச் செய்யாது தடுக்கும் தீயநோக்கம் கொண்ட மூடத் திருவிழாக்களின் அடிப்படைகளுக்குத் தம் இதயத்தில் நிரந்தரமாக இடம் தந்திருக்கும் தொழிலாளர்கள், இதுபோன்ற எழுச்சி தரும் விழாக்களில் ஈடுபடுவது இரட்டை மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த விழாக்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு, அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளை மட்டும் விளக்கி, அதற்கான பரிகாரத்திற்கு அவர்தம் போர் ஆற்றலைத் தருமாறு கேட்பது மட்டும் போதுமானதல்ல; தங்களை நேரடியாகப் பாதிக்கும் அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதோடுகூட, அவர்களது நெடுநாளைய பிணிகளைப் போக்கவும், அவர்களுக்கு நிரந்தரமான நல்வாழ்வு தேடித் தரவுமான வழிவகைகளையும் ஆராய்ந்து கூறிடல் வேண்டும்.

தொழிலாளர் தம் நல்வாழ்வு என்பது—எட்டு மணி நேர வேலை, சம்பள உயர்வு, கிராக்கிப் படி, தொழிற் சங்க உரிமை என்ற அளவோடு எல்லையிட்டு நின்று விடுவதல்ல; தொழிலாளர்கள் எந்த ஒரு சமுதாயத்தின் பிரதான அங்கங்களுள் ஒன்றாக விளங்குகிறார்களோ அந்தச் சமுதாயத்தின் முழுவிடுதலையோடு கூடிய நிரந்தரமான நல்வாழ்வைப்பொறுத்ததுதான், தொழிலாளர்தம் நல்வாழ்வும்! ஆகவே, அந்தச் சமுதாயத்தின் சகல துறையான விடுதலைக்கும் பாடுபடக் கூடிய ஒரு மாபெரும் தேசீய சக்தியாக உருவெடுக்க ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளர்களும், தங்களைத் தயாரித்துக் கொள்ளவேண்டுவது இன்றியமையாததாகும்.

திராவிட சமுதாயத்தின் அரசியல்—பொருளாதார—சமூக விடுதலைக்கெனத் திரண்டெழுந்துள்ள தேசீய இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தில், பலதரப்பட்ட தொழிலாளர்களும் அணிவகுத்து நிற்கிறார்கள். தாயகத்தின் விடுதலைக்காகத் தங்களை ஒப்படைத்துள்ள அந்த உத்தமர்கள், எழுச்சியூட்டும் இம்மே விழாவை மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாடுகின்றனர்.

'வர்க்கம்' என்ற முறையில், உலகின் பல நாட்டுத் தொழிலாளர்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் இருப்பினும், ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளருக்கும், அவரவர் தாயகத்தைப் பொறுத்த பிரச்சினைகளே பிரதானமானவையாக இருக்க முடியும்.

தங்கள் தாயகம் எது, அதன் இன்றைய நிலை என்ன என்பதை உணர்ந்துவரும் திராவிடத்தின் தொழிலாளர் பெருமக்கள், தாயகத்தின் விடுதலைப் படையின் முன்னோடிகளாயிருந்து, 'தாயகத்தை விரைவிலேயே வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து மீட்கப் போரிடுவோம்' என்று, எழுச்சியூட்டும், இப்பொன்னன மே திருநாளில் சூளுரைத்துக் கொள்கிறார்கள். திராவிடத்தின் உண்மையான விடுதலையில்தான் அவர்களது எதிர்கால நல்வாழ்வு அடங்கியிருக்கிறது என்பதை, இதுவரை உணராதிருக்கும் தொழிலாளர்களுக்கு, கழகத் தோழர்கள் ஆர்வம் பொங்கக் கொண்டாடிடும் இந்த மேதினவிழா சீக்கிரமே அவர்களும் உணரத் தூண்டுகோலாயிருக்கட்டும். வாழ்க மே விழா!

இமாசலப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், திரிபுரா ஆகியவிடங்களில் பாதை அபிவிருத்தி வேலைகளுக்காக மத்திய சர்க்கார் ரூ. 21 இலட்சம் வழங்கியுள்ளனர்.

தென்னாட்டின் உற்பத்தித் திட்டம் ஒத்திவைக்கப்படுவானேன்?

சென்னை சர்க்கார் டில்லியைக் கேட்பார்களா?

"தெற்கிலே தொழில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்று எல்லோரும் பேசுகிறார்கள்; மந்திரிகளும்கூட இதை ஓரளவுக்கு உணர்ந்துவிட்டார்கள். எத்தகைய தொழில் அபிவிருத்திக்கும் மின்சாரசக்தி அஸ்திவாரம் போன்றது. அது இல்லாமல் அபிவிருத்தி நிச்சயம் இருக்க முடியாது.

"மின்சார உற்பத்திக்கு நீலகிரி குந்தா திட்டம் பெரும் நம்பிக்கையூட்டுவதாக இருந்தது. இதற்குக் கனடா சர்க்கார் உதவ முன்வந்தார்கள். இது குறித்து பரிசீலிக்க ஒரு என்சினீயரையும் அனுப்பி வைத்தார்கள். பரிசீலனை செய்து பார்த்த பின்பு, 'இது மிகவும் பயனுள்ள திட்டம்; தொழில் வரட்சியுள்ள தெற்கிலே இது அவசியமானதும்கூட; கனடா சர்க்கார் உதவியால் பெரும் பயன் ஏற்படும்' என்று, அந்த என்சினீயர் ரிப்போர்ட் அனுப்பியுள்ளதாகக் கேள்வி.

"ஆகவே கனடா சர்க்கார் உதவியும் இத்திட்டத்திற்கு நிச்சயம் கிடைக்கும். இத்திட்ட வேலையை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார்கள். ஆனால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் பகுதியை மட்டும் சேர்த்துள்ளார்கள்; மற்ற இரண்டு பகுதிகளையும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்போகிறார்களாம். அதுவும், தெற்கிலே மின்சார சக்தியை எந்த அளவுக்கு உபயோகிக்கப்போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட பின்புதான் மற்றப் பகுதிகளை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்போவதாக செய்தி கூறுகிறது.

"தெற்கிலே மின்சார சக்தி உபரியாக இருந்து, உபயோகிக்க ஆட்கள் இல்லை என்று திட்ட கமிஷன் நினைத்துள்ளதா? பஞ்சாபைப் பார்த்த பின்பு அதே கண்ணோட்டத்துடன் தெற்கிலேயும் திரும்பிவிட்டார்கள் போலிருக்கிறது!

"பஞ்சாபில், பக்ரா - நங்கல் மூலம் ஏராளமான மின்சார உற்பத்தி கிடைக்கிறது; ஆனால், அங்கு உபயோகிக்கப் போதிய தொழில்கள் இல்லை. 'மின்சாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்' என்றால், 'மில்கள் கட்ட லைசென்ஸ் கொடுங்கள்' என்று கேட்கிறார்களாம்! லைசென்ஸ் கொடுக்க 'அம்பர் சர்க்கா' குறுக்கே நிற்கிறது! இருந்தாலும், பஞ்சாப் சர்க்கார் விடாப்பிடியாக வற்புறுத்தி வருகிறார்கள். உபரி மின்சார சக்தியை என்ன செய்வதென்ற தொல்லை அங்கு! ஏற்கனவே உள்ள தொழில்களுக்கு மின்சார சக்தி போதவில்லை என்ற தொல்லை இங்கு!

"தெற்கிலே உள்ள மில்களும், பெரிய தொழிற்சாலைகளும், 2,250 கிராமத் தொழில்களும், 2,200 கிராமங்களும், நகரங்களும் மின்சார வெட்டினால் பாதிக்கப்பட்டுள்ளன.

"இந்த நிலையில், குந்தா திட்டம் அமுலுக்கு வந்தாலும், மின்சார சக்தி இங்கு உபரியாக இருக்க முடியாது. குந்தா திட்டத்தின் முதல் பகுதியில் சுமார் 21 கோடி ரூபாய் செலவாகும், இதன் மூலம் இலட்சத்து 45 ஆயிரம் கிலோவாட் மின்சாரம் கிடைக்கும். தெற்கில் தொழில் வளர்ச்சிக்கு இது மட்டும் போதுமா என்பதுதான் கேள்வி.

"சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலை ஏற்பட்டால் அதற்கு ஐம்பதாயிரம் கிலோவாட் மின்சாரம் தேவைப்படும் என்கிறார்கள். கோவையில் தனிப்பட்ட தொழில் பிரமுகர்கள் முயற்சியால் ஆரம்பிக்கப்போகும் மற்றொரு தொழிலுக்கு சுமார் 25 ஆயிரம் கிலோவாட் மின்சாரம் தேவைப்படுமாம். மேற்கொண்டு ஆரம்பமாகும் புது மில்கள், மற்ற சிறு தொழில்களுக்கும் சுமார் இருபதாயிரம் கிலோவாட் மின்சாரம் தேவைப்படும். இத்துடன் பேப்பர், சிமெண்ட் தொழிற்சாலைகளை வேறு ஆரம்பிக்கப் போவதாக சர்க்கார் சூசகமாக அறிவித்து வருகிறார்கள்.

'இந்நிலையில், குந்தாவின் முதல் பகுதியில் உற்பத்தியாகும் மின்சாரம் இங்கு போதாது.

"ஆகவே, குந்தா திட்டத்தின் மூன்று பகுதிகளையும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்த்துக்கொள்ளும்படி சென்னை சர்க்கார் வற்புறுத்தவேண்டும்.

"மின்சார உற்பத்தித் திட்டங்களில் மேட்டூர் போன்றது நீர்ப்பாசனத்துடன் இணைந்தது. அணைக்கட்டில் நீர்மட்டம் குறைந்தால் மின்சார உற்பத்தியும் பாதிக்கும். குந்தா திட்டம் தனி மின்சார உற்பத்தித் திட்டமாக இருப்பதால், இந்தத் தொல்லையும் இருக்காது.

"தொழில்களை ஆரம்பித்த பிறகு மின்சார பற்றாக்குறையால் வருடாவருடம், 'வெட்டு' என்று அவதிப்படுவது சகஜமாகிவிட்டது. குந்தா திட்டத்தின் மூன்று பகுதிகளும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேருமானால் இத்தொல்லையைத் தவிர்க்கலாம்.

"தொழில்களுடன் இன்னும் பல ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கும் மின்சார வசதி கிடையாது. 'பம்பு செட்டு' களுக்கு மின்சாரம் கிடைக்காமல் விவசாயிகளும் அவதிப்படுகிறார்கள். ஏற்கனவே 'பம்பு செட்' வைத்திருப்பவர்களுக்கும் போதிய அளவு மின்சார சப்ளை கிடைப்பதில்லை.

"இந்தச் சூழ்நிலையில் கனடா சர்க்கார் உதவ முன்வந்தால், குந்தா திட்டத்தின் மூன்று பகுதிகளையும் இரண்டாவது திட்டத்தி- சேர்த்துக்கொள்வதில் மத்திய சர்க்காருக்கும் அதிகச் சிரமம் இருக்காது"

—இவ்வாறு, 28-4-56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'யூ. ஆர்.' என்பவர் எழுதியுள்ளார்.

உலக மக்கள் தொகை அதிகரிக்கிறது!

உலக மக்கள் தொகையைக் குறித்து ஐ. நா. 1955-ம் ஆண்டிற்கு வெளியிட்டிருக்கும் புத்தகத்தில் உலகின் மொத்த மக்கள் தொகையாக 1954-ம் ஆண்டில் 265 கோடியே 20 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மக்கட் பெருக்கம் அதிகரித்துவிட்டதாம்.

அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் ஆண்களைவிட பெண்கள் அதிகமாம்!

அரபு நாடுகளிலும், ஆசியாவிலும் பெண்களைவிட ஆண்கள் அதிகமாம்!

தலைமைமருத்துவமனைகள் முன்னேற்றம்

2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி உதவியாம்

"மாவட்டங்களிலுள்ள தலைமை மருத்துவ மனைகளின் முன்னேற்றத்திற்காக, ரூ. 1,21,81,000-மும் தாலுகா தலைமை மருத்துவ மனைகளின் முன்னேற்றத்திற்காக ரூ 1,23,21,000-மும் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

அம்பர் சர்க்காவும் அரசியல் தியாகிகளும்!

காங்கிரசின் அம்பர் சர்க்கா திட்டத்தில் எல்லா அரசியல் தியாகிகளும் ஈடுபடுத்தப்படுவார்களாம்! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25 அம்பர் சர்க்காக்கள் வேலை செய்யுமாம்!

பிஜோ இந்தியாவிலிருந்து தப்பி விட்டார்?

தீவிரவாதிகள் உதவிபெறுமல் தடுப்பதில் சர்க்கார் தோல்வி?

நாகர் கிளர்ச்சியை ஒடுக்க டில்லியின் புதிய திட்டம்

டம்டம் ஏப். 30—

தீவிரவாதிகளாயிருக்கும் நாகர்களை, தங்கள் இன மக்களிடத்தில் அண்டவிடாதபடி பார்த்துக்கொள்ள டெல்லி ஆதிக்கபுரியினர் பெருமுயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

தீவிர நாகர்களுக்கு எவ்வித உதவியும் செய்யக்கூடாதென நாக மக்களை இராணுவத்தினர் தடுத்து வருகின்றனராம்.

டெல்லி கூறுவதுபோல, தங்களுக்கு விசுவாசமான நாகர்களை இம்மாதிரி தீவிரவாதிகளுக்கு உதவி ஏதும்செய்யக்கூடாது என அசாம் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம்; அச்சுறுத்திருக்கிறதாம்.

ஆனால், இந்த முயற்சியில் டில்லிக்கு வெற்றிகிட்டவில்லை என்றும், நாகர்கள், தங்களின் விடுதலைக்காகப் பாடுபடும் தீவிரவாதிகளுக்குத் தொடர்ந்து உதவி வருகின்றனரென்றும் தெரியவருகிறது.

தீவிரவாதிகளுக்கு உதவி கிடைக்காமற் செய்துவிடுவதின் மூலம், அவர்களது விடுதலைக் கிளர்ச்சியைச் சாகடித்துவிடலாம் என்பது, டில்லியின் திட்டம் அது ஈடேறாமல் போவதாக—திருப்திதரக்கூடிய அளவுக்கு வெற்றியாக நடைபெறவில்லை என்பதாக அசாம் முதன் மந்திரி தெரிவித்திருக்கிறாராம்.

மற்றும் அவர், நாகர் தலைவரான பிஜோ பர்மாவிற்குத் தப்பிவிட்டார் என்று கூறப்படும் பலமான 'வதந்தி'களை மறுத்துரைத்தாராம்.

எல்லைகளுக்கெல்லாம் 'சீல்' வைக்கப்பட்டு விட்டதாகவும், பிஜோ தப்புவதற்கு வழியே இல்லை என்றும் வீரம் பேசினாராம்.

அந்த வீரம் பேசிய அவரே, அடுத்த கணத்தில், 'தப்பியிருந்தால் என்ன? பர்மாவிற்குத்தானே போயிருப்பார்? அதைப்பற்றிக் கவலை இல்லை; ஏனெனில், முன்பொருதரம், பிஜோ பர்மாவில் அடைக்கலம் புகுந்தபோது, பர்மா சர்க்கார் அனுமதிக்க மறுத்துவிட்டு, பிஜோவை இந்தியாவில் ஒப்படைக்கவில்லையா?' என்றும் கேட்டாராம்; நிருபர்களிடம்!

எப்படியிருக்கிறது, பார்த்தீர்களா—இந்த ஆதிபத்தியக்காரர் தம் போக்கு!

பெல்கிரேட், ஏப். 29—

யூகோ குடியரசுத் தலைவர் மார்ஷல் டிட்டோ ஜூன் திங்களில் ரஷ்யாவிற்குச் செல்வாராம்.

'ஒரிசா சம்பவங்களுக்குக் காங்கிரசாரே பொறுப்பு'

'பலாத்காரத்தைத் தூண்டியவர்கள் காங்கிரஸ் மந்திரிகளும் ஏடுகளுமே'

டில்லி மாநிலங்கள் சபையில் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 27—

"ஒரிசாவில் நடைபெற்ற பலாத்காரச் செயல்களைக் காங்கிரசார்தான் தூண்டிவிட்டனர். காங்கிரஸ் மந்திரிகள் இராஜினமா செய்யப்போவதாக அறிவித்துத் தூண்டிவிட்டனர். காங்கிரஸ் செய்தித் தாள்கள் 'சபாஷ், காங்கிரஸ்' என்ற தலையங்கங்கள் எழுதின,"

என்று, பாட்ஞ ராஜா, மாநிலங்கள் சபையில், மாநில புது அமைப்பு மசோதாமீது நடைபெற்ற விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

'செரிகேலா, கார்ஸ்வான் பகுதிகளை ஒரிசா மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்ற திட்டத்திற்கு, பலாத்காரச் செயல்கள் குறுக்கே நிற்கக்கூடாது,' என்று பண்டித பந்த் பேசினர்.

உடனே, பாட்ஞ ராஜா எழுந்து; 'பலாத்காரத்தைத் தூண்டியதற்கு யார் பொறுப்பாளி?' என்று கேட்டார்.

'நீங்கள்தான்' என்று பீகாரைச் சேர்ந்த சில காங்கிரஸ் உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்.

'இது குறித்து விசாரணை நடத்த உள்நாட்டு மந்திரி ஒரு குழு நியமிப்பாரா?' என்று பாட்ஞ ராஜா கேட்டார்.

'குழு நியமிக்குமாறு கோரி அதன்கீழ் பாதுகாப்புத் தேடுவது ஒரு நாகரீகமான வழியாகிவிட்டிருக்கிறது,' என்று பண்டித பந்த் பதிலளித்தார்.

'பிறருக்கு எரிச்சல் மூட்டும் வகையில் குற்றம் சாட்டுவது மற்றோர் வழி,' என்று மூர் என்ற தோழர் குறிப்பிட்டார்.

'நான் கூறுவது ஆதாரமற்றதல்ல; எனது அறிவிப்பை எவரும் எதிர்க்கவில்லை' என்று வீரம் பேசினராம், உள்நாட்டமைச்சர்!

பாட்ஞ ராஜா உடனே எழுந்து, 'மந்திரி கூறியதை மறுக்கிறேன்; தவறு என அறைகூவிக் கூறுகிறேன்,' என்று பதிலுரைத்திருக்கிறார்.

'உத்தரவுகளையும் சட்டங்களையும் மீறுமாறு, பல்வேறு பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. இதை எவரும் மறுக்கிறார்களா?' என்று உள்நாட்டு மந்திரி ஆத்திரம் பீறிடக் கேட்டாராம்.

அப்போது தான், தலைப்பில் குறிப்பிட்டிருக்கிற மாதிரி, பாட்ஞ ராஜா பதில் தந்தாராம்.

ஆராய்ச்சித் துறையில் அரியதோர் முயற்சி

இருதய மாற்றம் வெற்றிகரமாக முடியக்கூடுமாம்

ஒருவரின் இருதயத்தை எடுத்து வேறொருவருக்குப் பொருத்துவது வெற்றிகரமான இரண சிகிச்சையாக விரைவில் வந்துவிடுமென்று பிரபல அமெரிக்க இரண சிகிச்சை நிபுணர் டாக்டர் யூலின் தெரிவித்துள்ளார்.

"இருதயங்களின் வேலையைச் செய்யும் கருவிகள் இருக்கின்றன. இருதயத்தை இயங்கவைக்கும் நாடிகள் மீண்டும் வேலைசெய்யும்படி செய்வது ஒன்றுதான் பெரிய கஷ்டம். நாற்று பிடுங்கி நடுவது போல் இருதயத்தை எடுத்துப் பொருத்தும் சோதனையை இன்னும் மனிதர்களுக்குச் செய்து பார்க்கவில்லை; நாய்களுக்கு மட்டுமே செய்துள்ளனர்; ஆனல், வெற்றியடையவில்லை. ஒருவரின் இருதயத்தை எடுத்து வேறொருவருக்குப் பொருத்தும் இரண சிகிச்சை இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகளில் வந்துவிடும்" என்றும் அவர் அறிவித்திருக்கிறாராம்.

இந்தியாவில் மின்சாரம் உபயோகிப்பவர்களின் மொத்தம் எண்ணிக்கை, 1950-ல் 15,00,737 ஆக இருந்தது; 1954-ல் 21,64,782 ஆக உயர்ந்துவிட்டது.

'வகுப்புவாதிகள் — வளர்ந்துவிட்ட சிறுபிள்ளைகள்!'

'இந்து சமூகத்தை ஒன்றுபடுத்துவதாகக் கூறுவோர் பிளவு உண்டுபண்ணுவோரே!'

பண்டித நேரு வர்ணனை-அர்த்தால் பற்றி புதிய விளக்கம்!

ஜபல்பூர், ஏப். 27—

"வகுப்புவாதக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம், தற்கால பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேட முடியாத பெரியவர்களாகிவிட்ட குழந்தைகள்,"

என்று, இந்தியப் பிரதமர் நேரு இங்கு பேசியிருக்கிறார்.

இங்கு, காங்கிரஸ் ஊழியர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அத்தகு வகுப்புவாதக் கட்சிகளின் நடவடிக்கைகள் தற்கால உலகில் புரிந்துகொள்ள இயலாதனவாகவுள்ளன.

"குழந்தைகளைக் கூட்டிவைத்து ஏதேனும் உடற்பயிற்சி, (டிரில்) செய்யக் கற்றுத்தருவது சுலபமான காரியம்தான்; ஆனல் அவர்கள் (வகுப்புவாதிகள்) குழந்தைகளின் மனதைப் பக்குவப்படுத்தும் முறை இருக்கிறதே, அது கவலைதரக் கூடியதாகும்.

"எனக்கு சில நேரங்களில், அதுபோன்ற கட்சிகளை என்ன செய்வதென்றே புரியவில்லை. ஒருவன் எதிரியாயிருந்தாலும், அவன் புத்திசாலியாயிருந்தால் அவனைச் சமாளிக்கலாம்; ஆனல், ஒரு முட்டாளிடம் நாம் எப்படிப் பேசுவது?

"இந்த சமூகத்தை ஒன்றுபடுத்தப் போகிறோம் என்று பேசுகிற கட்சிகள் இருக்கின்றன; ஆனல் அவர்களின் முறைகளும், நடவடிக்கைகளும், மக்களிடத்தில் மேலும் பிளவுகளை—பிரிவுகளை உண்டாக்குவனவாகவே உள்ளன.

"தொடர்ந்து இதே வழிகளில் அவர்கள் செயல்பட முனைவார்களேயானல், அவர்கள் இந்த சமூகத்தை ஆயிரம் கூறுகளாகப் பிளந்துவிடுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை."

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"உண்ணாவிரதத்திற்கும், அர்த்தால்களுக்கும் இடமே இல்லை. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு மக்கள் தங்கள் நியாய உரிமைகளைக்கூற உரிமை பெற்றிருக்கவில்லை. ஆகவே, உரிமைப் பெற்றில்லாத அந்தக் காலத்தில் மறியலும், அர்த்தாலும் நடத்துவதற்கு நியாயம் உண்டு. இன்றோ ஒவ்வொருவரும் சட்டத்திற்கு உட்பட்டும், குடியரசு அமைப்பிலும் தமது குறைகளை எடுத்துக்கூறலாம். இந்நிலையில் அர்த்தால்கள் நடத்துவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டுவிட்டது? எனவே, வகுப்புவாதக் கட்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள், சுதந்திரத்திற்குப் பிறகு நிலைமை மாறிவிட்டதென்பதை அறிந்து கொள்ளாதவர்களாக இருப்பார்கள்; அல்லது அறிந்திருந்தும் புரிந்துகொள்ளாதவர்களாக இருப்பார்கள்.

"பலாத்கார வழிகளில் நம்பிக்கைகொண்டவர்களுக்கு ஒன்றைக் குறித்து எச்சரிக்கைச் செய்ய ஆசைப்படுகிறேன்—என்றாவது ஓர் நாள் அவர்களைக் காட்டிலும் முரடர்கள் அவர்களுக்குச் 'சூடு' கொடுத்துவிடுவார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது!"

அணுசக்தியின் ஆற்றல்

சூரிய வெப்பத்திற்கு முன் மிகச் சாதாரணமானதாம்

ஐ. நா., ஏப். 29—

சூரிய வெப்பம், காற்றின் சக்தி, அலை கொந்தளிப்பு, பூமியிலும் கடலிலும் வெளிப்படும் வெப்பம் ஆகியவற்றை விசை உற்பத்திக்குப் பயன்படுத்துவது குறித்து, 'சர்வதேச மாநாடு' ஒன்றுகூட்ட வேண்டுமென ஐ. நா. பொருளாதார சமூகக் 'கவுன்சிலி'ல் பிரான்ஸ் பிரேரேபித்துள்ளதெனத் தெரியவருகிறது.

"அணுசக்தியைப் பயன்படுத்துவது சில கட்டுப்பாடுகளுக் குட்பட்டதாகும்; எனவே, இதில் எல்லையற்ற நம்பிக்கைக் கொள்வது ஏமாற்றத்தைத் தரக்கூடும். சூரிய வெப்பமோ வேண்டிய அளவு பூமி முழுமையிலும் கிடைக்கிறது. இதன் முன் அணுசக்தி மிகச் சாதாரணமானதாகும். எகிப்தில் விழும் சூரிய வெப்பத்தை மட்டுமே பயன்படுத்தி மக்கள் சமூகத்திற்குத் தேவையான விசை உற்பத்தி செய்யலாம்," என்று, பிரான்ஸ் தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

திருச்சியில் மே 17, 18, 19, 20-ல்

பெரிய இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத் திடலில் அமைந்துள்ள

"வள்ளுவர் நகரில்"

நடைபெறும்

★

தலைவர்: **இரா. நெடுஞ்செழியன்**

திறப்பாளர்: **ஜி. பி. சோமசுந்தரம்**

வரவேற்புக் குழுத் தலைவர்: **ஏ. பி. தருமலிங்கம்**

★

கலை விருந்து அளிப்போர்:

திருவாடுதுறை டி. என். இராசரத்தினம்

என். எஸ். கிருஷ்ணன் — கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன் — நாகூர் அனிபா
எஸ். எஸ். இராஜேந்திரன் — ஜி. கஸ்தூரி
டி. வி. நாராயணசாமி — பி. எஸ். செல்வா

★

கருத்து விருந்து அளிப்போர்:

அண்ணா

என் வி நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்	மு. கருணாநிதி
கே ஏ. மதியழகன்	க. அன்பழகன்	கண்ணதாசன்
சி. பி. சிற்றரசு	டி. கே. சீனிவாசன்	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். எஸ். இளங்கோ	கி. மனோகரன்	காஞ்சி கல்யாணசுந்தரம்
சத்தியவாணி முத்து	தில்லை வில்லாளன்	கா. அப்பாத்துரை
அருண்மொழி	எம். எஸ். இராமசாமி	அரங்கண்ணல்
ப. உ. சண்முகம்	ஏ. கோவிந்தசாமி	அ. பொன்னம்பலனர்
இரா. சு. தங்கப்பழம்	எம். பி. சுப்பிரமணியம்	ஆர். எஸ். பாண்டியன்
கே. கே. நீலமேகம்	கே. வி. கே. சாமி	அலமேலு அப்பாத்துரை
பி. ஆர். கோகுலகிருஷ்ணன்	டி. கே. பொன்னுவேலு	அலிசேக் மன்சூர்

★

மாநாட்டுக் கட்டணம்:

நான்கு நாட்களுக்கும் சேர்த்து:

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	10—0—0	10—0—0
2-ம் பிரிவு	,,	5—0—0	2—8—0
3-ம் பிரிவு	,,	3—0—0	1—8—0

தனித்தனி ஒவ்வொரு நாளும்:

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	3—0—0	3—0—0
2-ம் பிரிவு	,,	1—8—0	0-12—0
3-ம் பிரிவு	,,	1—0—0	0—8—0

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி கட்டணம் (நுழைவு உட்பட): ரூ. 5—0—0

பொதுக்குழு உறுப்பினரல்லாதோர் வரவேற்புக் குழுக் கட்டணம்: ,, 25—0—0

எம். எஸ். மணி, எஸ். முத்து,—செயலாளர்கள்

பூவிருந்தவல்லி சிறப்புக்கூட்டம் ஒத்திவைப்பு

சென்னை, ஏப். 29—

"29-4-56 அன்று காலை 10 மணியளவில், பூவிருந்தவல்லி தி. மு. கழகத் தோழர்கள் மீதுள்ள வழக்கு நிதிக்காக, பூவிருந்தவல்லி விக்னேசுவரர் தியேட்டரில் நடத்தப்படவிருந்த சிறப்புக் கூட்டம், நேற்று பெய்த பெருமழையின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் புரட்சி நடிகர் இராமச்சந்திரன் அவர்களும் பிறிதோர் நாள், சிறப்புக் கூட்டத்தில் பேசுவார் என்று அறிவித்துக் கொள்கிறேன்," என்று, பூவிருந்தவல்லி தி. மு. கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

திரு ஏறுமல் தடுப்பதற்கு புதிய இரசாயனம்

கான்பூர் பரிசோதனைச்சாலை உருவாக்கியுள்ளதாம்

உலோகங்களைச் சீக்கிரமாக உலர வைத்து, தண்ணீரைப் போக்கித் தற்காலிகமாய்த் திரு ஏறுமல் பாதுகாப்பளிப்பதற்கான ஒரு புதிய இரசாயனத் தயாரிப்பு முறையை கான்பூர் தொழில் நுட்ப அபிவிருத்திப் பரிசோதனைச்சாலை உருவாக்கியிருக்கிறது. அதை உலோகங்களின்மீது சுலபமாகப் பிரயோகிக்கலாம்; அதில் உலோகங்களை வெறுமனே அமிழ்த்தி எடுத்தோ, உலோகத்தின்மீது அதைத் தெளித்தோ, மேல்போக்காய் ஊற்றிப் பூசக்கொடுத்தோ பாதுகாப்புறப்படுத்திவிடலாம். உலோகத்தை உலையில் காயவைக்கவோ, மின்சாரத்தால் பூசப்பூசவோ தேவையில்லை.

ஒத்திவைக்கப்படுமாம்!

புதுடில்லி, ஏப். 29—

பொதுத் தேர்தல்கள் நடைபெற்று முடியும்வரையில் காங்கிரஸ் தலைவர் தேர்தல் ஒத்திவைக்கப்படலாமென காங்கிரஸ் வட்டாரங்கள் கருத்தறிவிக்கின்றனவாம்.

காங்கிரசில் மலிந்து வரும் கோஷ்டிச் சண்டை!

மத்திய பாரத்தில் ஒரு மாவட்டத் தலைவருக்குச் சீட்டு

நகரசபைத் தேர்தலில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியவர்மீது நடவடிக்கை

வேறெல்லாப் பிரதேசக் காங்கிரசிலும் மலிந்திருக்கிற கோஷ்டிச் சண்டை மத்திய பாரத் பிரதேசக் காங்கிரசிலும் நிலவுவதாகத் தெரிய வருகிறது.

ஒரு மாவட்ட காங்கிரஸ் தலைவருக்கும்—பிரதேசக் காங்கிரஸ் தலைமைக்கும் பிடிக்கவில்லை என்றும், அதனால் கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதாயும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற நகர சபைத் தேர்தலில், கட்சிக் கட்டுப்பாட்டிற்கு விரோதமாக நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டி, சிவபுரி மாவட்ட காங்கிரஸ் தலைவரான வைதேகி சரண் பராஷார என்பாரையும், இன்னும் நால்வரையும் காங்கிரசிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைத்து மத்திய பாரத் பிரதேசக் காங்கிரஸ் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம்.

இந்தூர் நகர சபைத் தலைவர் தேர்தலில், காங்கிரஸ் அபேட்சகரான டாக்டர் மனோகர்லால் மேதா என்பார், இந்து மகா சபை அபேட்சகரிடம் தோல்வியடைந்தாராம். 19 பேர் கொண்ட நகர சபையில் காங்கிரசிற்கு 13 இடங்கள் இருப்பதாயும், இருந்தும் இந்தத் தோல்வி ஏற்பட்டதற்குக் காரணம், நான்கு உறுப்பினர்கள் வரை இந்து மகாசபை அபேட்சகருக்கு வாக்குத் தந்தார்களாம். காங்கிரசிற்குள் உள்ள கோஷ்டிச் சண்டையே இந்தப் போக்கிற்குக் காரணம் என்றும் வெளிப்படையாகவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் குறித்த காலத்தில் நிர்வாகிகள் தேர்தலை நடத்தாததற்குக் காரணம் காட்டுமாறும், அதற்காக அந்தக் குழுக்களை என் கலைத்துவிடக்கூடாது என்று பதில் தருமாறும் ஷஜாபூர், சிவபுரி ரெய்சன் மாவட்டக் காங்கிரஸ் குழுக்களுக்கு தாக்கீது அனுப்பவும் பிரதேசக் காங்கிரஸ் முடிவெடுத்திருக்கிறது.

★

மே தினமும்—கழகத் துவக்க விழாவும்

★

காஞ்சிபுரம் :
(ஏகாம்பரநாதர் சன்னதி தெரு)
2—5—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
சி. வி. எம். அண்ணாமலை
பேசுவோர்:
என். வி. நடராசன்
கண்ணதாசன்

குறிப்பு :—அன்று காலை 7 மணியளவில் தோழர் இரா. வெங்கிடேசன் தலைமையில் சைக்கிள் ஊர்வலமும், பல முக்கிய வீதிகளில் கொடியேற்று விழாவும் நடைபெறும்,

புதுமனை புகு விழா

2—5—56 காலை 9 மணியளவில், திரு. எம். குப்புசாமி தலைமையில், ஆத்தூர் வைனிசெட்டித் தெருவில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் திரு. கு. நல்லதம்பி அவர்களின் இல்லத்தை திரு. எம் பி. சுப்பிரமணியம் எம்.எல் ஏ., திறந்து வைப்பார்; திரு ஏ. ஆனைமுத்து பேசுவார்.

காசி நகர காங்கிரசிலும் கோஷ்டிச் சண்டை

அலுவலகத்திற்கு இரட்டைத் தாழ்ப்பாள்

காசி, ஏப். 30—

காங்கிரஸ் கட்சி இப்போது எவ்வளவு கலகலத்துப் போயிருக்கிறது என்பதை விளக்குவனவாகவே உள்ளன, ஆங்காங்கே ஏற்படும் கோஷ்டிச் சண்டைகள்!

காசிநகர காங்கிரசிலும் இந்தக் கோஷ்டிச் சண்டை தோன்றி, வலுத்து வருகிறதாம்.

இதன் விளைவாக கடந்த ஒரு வார காலமாகக் காங்கிரஸ் அலுவலகம் பூட்டிக் கிடக்கிறதாம்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளரிடம் பழைய செயலாளர் பொறுப்புகளைத் தர மறுத்துவிட்டாராம்; இதனால் புதிய செயலாளர், கட்டிடத்தின் கதவை இழுத்துச் சாத்தி பூட்டிவிட்டாராம். உடனே பழைய செயலாளர், தானும் ஒரு பூட்டுக் கொண்டு வந்து, கதவில் மாட்டி பூட்டிவிட்டாராம்.

இரட்டைத்தாழ்ப்பாள் போடப்பட்டுள்ள இந்த அலுவலகம் மூடிக் கிடப்பதால், செயற்குழுக் கூட்டங்கள், கட்டிடத்தை அடுத்துள்ள மைதானத்தில் நடைபெறுகின்றனவாம்!

உண்ணாவிரதம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விருந்து தருவதாக சர்க்கார் கூறியிருந்ததாகவும், ஆனால், ரூ. 2000 திரட்டித்தர கிராம மக்கள் மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

உதவி கலெக்டர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கிராம மக்கள் கேட்கவில்லையாம். பின்னர் நாவல் சிங்ஜி என்ற அந்த அதிகாரி காலவரையறையின்றி உண்ணாவிரதம் துவங்கினாராம். கிராம மக்களும் இதைக் கண்டபின் திட்டத்திற்கு ரூ. 2,000 திரட்டித்தர முடிவு செய்தார்களாம்.

காமராசர் மறுப்புரைப்பாரா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவர்னராகப் போய்விடுகிறேன்."

என்று காமராசர், தனது மந்திரிகளிடம் கூறியிருக்கிறார் என்றும் நான் யூகிக்கிறேன்.

"நான் இப்படிக் கூறுவதற்குக் காரணம், காமராசர் இவற்றை மறுப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்பதுதான்!

"'தமிழ் நாடு' என்று பெயர் வைக்காததற்கும், காமராசரின் இந்த சதித் திட்டம் தான் காரணம் என்றும் யூகிக்கிறேன்.

"எப்படியெனில், இன்று 'சென்னை' என்றிருக்கும் பெயர் தான், நாளை, திரு-கொச்சியும், மைசூரும், முடியுமானால் ஆந்திரமும் இணைந்து அமையப்போகும் தட்சிண இராஜ்யத்தின் பெயராக விருக்கும். இன்று, சென்னையை 'தமிழ் நாடு' என்று மாற்றிவிட்டால், இன்னும் சில மாதங்களில், பொதுத் தேர்தலுக்குப்பின் தட்சிண இராஜ்யம் அமையும்போது, மீண்டும் எப்படி 'தமிழ் நாடு' என்று மாற்றுவது? அற்பகாலம் மட்டுமே நீடிக்கப்போகிறது என்பதால்தான், 'தமிழ் நாடு' என்று பெயரிட மறுத்துவிட்டிருக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன்; இல்லாவிட்டால் வேறு காரணம் எனக்குப்படவில்லை.

"காமராசர் நம்மைக் குறித்து மட்டும் இவ்வளவு கடுமையாகத் தாக்கிப் பேசுவானேன்?

"ஆச்சாரியாரைப் பதவியிலிருந்து நீக்கியதும், இவர் பதவிக்கு வந்தவுடன், நேருவிடம் கூறியிருக்கிறார் — 'இங்கேதான் பதவிக்கு வந்துவிட்டதால், இனி எதிர்க் கட்சிகள் எல்லாம் அடங்கிவிடும்; அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரசிற்குப் போட்டியே இருக்காது'—என்று யூகிக்கிறேன்.

"அதனால்தான், தேர்தலைப் பற்றி அவர் மிகவும் குழப்பமடைந்திருக்கிறார்; 'தி. மு. கழகம் எங்கே போட்டியிட முற்பட்டு விடுகிறதோ'வென அச்சப்படுகிறார்.

"அவரே கூறுகிறார் :—'கம்யூனிஸ்டுகள் நல்லவர்களாகி விட்டனர்'—என்று! சோஷலிஸ்டுகளைச் சரிசெய்து விடலாம்; திராவிடர் கழகமோ தேர்தலிலேயே கலந்து கொள்ளாது; இந்தத் தி. மு. க. தான்...' என்று பேசுகிறார்.

"இந்த நிலைகளை எண்ணிப் பார்த்துத்தான், நான், 'திராவிட கழகத்தவர் வரும் தேர்தலில் போட்டியிட வேண்டும்' என்று கூறினேன்.

"நான் இன்றும் கூறுகிறேன் —திராவிட கழகத்தவர் தேர்தலில் நின்றால், அந்த வட்டத்தில் தி. மு. க. போட்டியிடாது என்பதுடன், அந்த தோழர்களின் முழு வெற்றிக்காகப் பாடுபடவும் செய்யும் என்று உறுதி தருகிறேன்.

"திராவிட கழகம் இந்தத் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும் என்று நான் கூறுவதற்குக் காரணங்கள் மூன்று உண்டு

'முதலாவது—உள்ளத்தில் நேர்மையிருக்கிறது; வேறு எவரைக் காட்டிலும், திராவிட கழகத்தவர் சட்டசபையைக் கைப்பற்றுவதை நாம்விரும்புகிறோம் அவர்கள் திராவிடப் பற்றுக்கொண்டவர்கள் என்பதால். அதனால் அவர்கள் தேர்தலுக்கு நிற்க வேண்டுமென விரும்புகிறோம்.

"இரண்டாவதாக—நாம் தேர்தலில் நின்று வெற்றி பெற்றால், நாடே கெட்டுவிடும் என்று திராவிட கழகம் கருதுகிறது. அதற்குப் பதிலாக அவர்களே நிற்கட்டும் என்று நாம் கூறுகிறோம்; அவர்கள் நின்று வெற்றி பெற்றால் நாடு கெட்டுவிடும் என நாம் நினைக்கவில்லை.

"மூன்றாவதாக—தேர்தலில் காங்கிரசிற்குப் போட்டியே இல்லாது போய்விட்டால், திராவிடர் இயக்கம் பாழ்பட்டுவிடும்.

"இதனால்தான், திராவிட கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து தேர்தலில் கலந்து கொள்ளலாம் என்று நான் கூறினேன்.

"நாம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான, கொள்கை ஏதுமில்லாதவர்கள் பின்னாலேயே ஓடிக்கொண்டிருப்பது? கடந்த காலத்திலே நாம் அப்படி ஓடியதினால் பட்ட அவஸ்தை என்ன கொஞ்சமா?

அதனால்தான், திராவிட முன்னேற்றக் கழகம், மாநாட்டில் முடிவு கிடைத்து, தேவையான வசதிகளும் கிடைக்குமானால், வரும் பொதுத் தேர்தலில் நிச்சயமாகக் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுவது என்ற கருத்திலிருக்கிறது.

"காங்கிரஸ் போட்டியில்லாது வெற்றி பெற்றுவிடுமேயானால், தமிழ் நாட்டின் தன்மானமே பாழாகிவிடும். வடநாட்டவர் நம்மை எல்லாம் கேலி பேசுவர்.

"நாம் ஒரு குறைந்தபட்சத் திட்டத்தின்கீழ் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுவோமேயானால், காங்கிரசார் சில பல வாக்குறுதிகளையேனும் மக்களுக்குத் தருவர். எதிர்காலத்திற்கான அந்த வாக்குறுதிகளைப் பெறுவதற்கேனும் நாம் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

"எனவே, நான் திராவிடர் கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்வேன்—நீங்கள் தேர்தலில் நிற்காவிடினும், எங்களை ஆதரிக்காவிடினும், குறுக்கே வந்து நிற்காதீர்'—என்று!

"இல்லையேல், குருதட்சணையாக, ஏகலைவனிடம் துரோணாச்சாரியார் கட்டை விரலைக் கேட்டதுபோல், காணிக்கை கேட்டாலும் தந்துவிடச் சித்தமாயிருக்கிறோம். எப்படியிருப்பினும், திருச்சி மாநில மாநாட்டு முடிவு, 'தேர்தலுக்கு தி. மு. கழகம் நிற்க வேண்டும்' என்றிருக்குமானால், காங்கிரசை நிச்சயமாக எதிர்த்துப் போட்டியிட வேண்டும் என்றே கழகம் கருதியிருக்கிறது."

★★★★★★★★★★★★★★★★★★

மாநில மாநாடு: அலங்கார முகப்பு

'மலைக் கள்ளன்' போன்ற பல முக்கிய திரைப் படங்களுக்கு 'ஆர்ட்' டைரக்டராயிருந்து பணியாற்றிய ஓவிய நிபுணர், செல்லய்யா அவர்கள் அலங்கார முகப்புக்கான பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

—விளம்பரக் குழு

★★★★★★★★★★★★★★★★★★

தென்னவருக்கு டில்லியின் கருணை!

நியாயம் கோரினால் பிச்சை தருகிறார்கள்

நம்மிடம் வீரம் பேசுவோர் அவர்களுக்கு வெண்சாமரம் வீசுகின்றனர்

இரண்டாம் திட்டத்தில் தென் மாநிலங்களுக்கு அதிகத் தொகையாம்

டில்லியின் கருணை—கிருபாகடாட்சம் கிடைத்துவிட்டது தென்னாட்டவருக்கு!

'பெரிய மனிதர்'களின் பேருள்ளத்திலிருந்து அருள் சுரந்துவிட்டது!

'இரண்டாம் திட்டத்தில் தென்னாட்டவருக்கு நியாயமான பங்கு தரப்படவில்லை என்று குறைப்பட்டீர்களே! குற்றம் சுமத்தினீர்களே—ஓரவஞ்சனை என்று!—அதேல்லாம் இல்லை என்பதை இதோ அவர்களின் கருணை காட்டுகிறதே பார்த்தீர்களா?'—என்பதுபோல, கடுகை மலையாக்கிக் காட்ட நினைக்கிறது கோயங்காவின் இதழ் ஒன்று!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து, திட்டக் குழு தனது இறுதி முடிவுகளை வெளியிட்டுவிட்டதாம்.

அந்த முடிவுகளின்படி தென் மாநிலங்களுக்கு அதிகமான தொகை(!)—ஏற்கனவே ஒதுக்கப்பட்டதைவிட அதிகமான தொகை ஒதுக்கத் திட்டமிட்டிருக்கிறார்களாம்—அந்த இதழ் செய்தி தருகிறது, 'பெரிய எழுத்து'க்களில்!

சென்னைக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டது ரூ. 170·3 கோடி; இப்போது ரூ. 173·1 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறதாம்!

ஆந்திராவிற்கு முன்பு ரூ. 116·2 கோடி; இப்போது ரூ. 119 கோடி!

ஐதராபாத்திற்கு முன்பு ரூ. 100 கோடி; இப்போது ரூ. 100·2 கோடி!

மைசூருக்கு முன்பு ரூ. 78 கோடி; இப்போது ரூ. 80·6 கோடி!

திரு-கோச்சிக்கு முன்பு ரூ. 71·2 கோடி; இப்போது ரூ. 72 கோடி!

எவ்வளவு கருணை பார்த்தீர்களா? எத்தனை கோடிக்கணக்கான ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டுவிட்டது கண்டீர்களா?

நியாயம் கோரினால், பிச்சை தருகிறார்கள் டில்லிப் பெரியவர்கள்!

இங்கு மந்திரிகள் என்ற பெயரில் உலவும் சில முதுகெலும்பில்லாத பிராணிகள், 'எல்லாம் அவன் செயல்; டில்லிப் பெரியவர்—எங்கள் எஜமானர் கூறுவதே சரி; கொடுத்ததே போதும்'—என்று கூறி, டில்லிக்கு வெண்சாமரம் வீசிக்கிடந்தால் அவர்கள், பிச்சை மட்டுமா தருகிறேன் என்பார்கள்?

இந்த வெண்சாமரம் வீசும் டில்லியின் கைப்பாவைகள், நம்மிடத்தில் வீரமாக வேறு பேசுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது!

மந்திரிகளின் எண்ணிக்கை

மேலும் வளருகிறது!

புதுடில்லி, ஏப். 30—

மாநிலங்கள் சபை உறுப்பினரான எம். எம். ஷா டெல்லி சர்க்காரில் மந்திரியாகவும், மக்கள் சபை உறுப்பினரான டாக்டர் மனமோகன்தாஸ் உதவி மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருப்பதாக இன்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஷா கைத் தொழில் அபிவிருத்தி மந்திரியாகவும், தாஸ்—உதவி கல்வி மந்திரியாகவும் பொறுப்பேற்பார்களாம்.

கைத் தொழில் அபிவிருத்தி இலாகா வர்த்தகத் தொழில் இலாகாவுடன் இணைக்கப்படுமாம்.

ஏஜெண்டு தோழர்களுக்கு

அறிவிப்பு

தபால் மூலமாக அனுப்பப்படும் இதழ் கட்டுகளின்மேல் உறைகளில் 'To be delivered at window' என எழுதப்பட்டு அனுப்பப்படுவதால், தபால் மூலமாக இதழ்களைப் பெறும் ஏஜெண்டுத்தோழர்கள் அந்தந்த ஊர் தபால் நிலையத்திலேயே சென்று, அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கும் 'அடையாள அஞ்சல் அட்டை'யைக் காட்டி, இதழ் கட்டுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

—பொறுப்பாளர்

காலம் மாறுகிறது!

திரிபோலி, ஏப். 28—

லிபியா மன்னர் தம் குடும்பத்தினர், உற்றார் உறவினர் அனைவரையுமே காவலில் வைத்திருப்பதாக செய்திகள் மூலம் தெரிகிறது. மன்னரின் இசைவு இன்றி அவர்கள் அரண்மனையைவிட்டு வெளிச் செல்ல முடியாதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.